## 30.9 பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர் காலிப் பணியிடங்களை நிரப்ப ஊராட்சி ஒன்றிய நியமனக்குழுக்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 114 நாள் : 06.05.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 114, ஊ.வ.துறை, நாள்–04.04.91
2. அரசாணை (நிலை) எண். 43, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்–15.02.94
3. அரசாணை (நிலை) எண். 191, ஊ.வ.துறை, நாள்–07.09.98
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் ந.க.எண் 71628/எப் 1/98, நாள் 10.09.98
5. ஊரக வளர்ச்சி இயக்குநரின் ந.க.எண் 40230 / எப் 1/99, நாள் 10.06.99

**ஆணை**

04.04.1991 நாளிட்ட ஊரக வளர்ச்சித்துறையின் அரசாணை நிலை எண் 114ல் ஊராட்சி ஒன்றியங்களில் பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களில் ஏற்படும் காலியிடங்களை பூர்த்தி செய்ய கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த அரசாணைகளில் குறிப்பாக பதிவுறு எழுத்தர் பதவிக்கு நேரிடை நியமனம் தடைசெய்யப்பட்டு (பிற அரசுத் துறைகளில் இல்லாததைப் போன்று) மாவட்ட அளவில் அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர் பணியிலிருந்து பணி மூப்பின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழுத் தேர்வு செய்து பதவி உயர்வு செய்து பணியமர்த்த வேண்டும் என ஆணையிட்டுள்ளது. இந்நியமன முறையில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் ஊரக வளர்ச்சித் துறையின் அரசு ஆணை (நிலை) எண் 191, நாள் 07.09.98ல் வெளியிடப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பதிவுறு எழுத்தர், அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களில் உள்ள காலி பணியிடங்களை ஊராட்சி ஒன்றிய நியமன குழுக்கள் மூலம் நிரப்ப அனுமதிக்க அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

2. எனவே படிக்கப்பட்டவை 1 மற்றும் 3ல் உள்ள அரசாணைகளை அரசு ஆய்வு செய்தபின் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பொது நிதியில் இருந்து ஊதியம் வழங்கப்படும் பணியிடங்களில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஆளுகைக்குட்பட்ட பணியிடங்களான இளநிலை உதவியாளர், தட்டச்சர், காசாளர் போன்ற பணியிடங்கள், மிகைப்பணியிடங்கள் மற்றும் மறையும் தன்மையுடைய பணியிடங்கள் தவிர ஏனைய பணியிடங்களான பதிவுறு எழுத்தர் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களில் ஏற்படும் நிரந்தர காலிப்பணியிடங்களை அந்தந்த ஊராட்சி ஒன்றிய நியமனக்குழு பணி விதிகளையும், கீழ்க்கண்ட திருத்திய நெறிமுறைகளையும், நிபந்தனைகளையும் கடைப்பிடித்து நிறைவு செய்து கொள்ளலாம் என்று அரசு ஆணையிடுகின்றது.

அ. பதிவுரு எழுத்தர் பணியில் ஏற்படும் நிரந்தர காலி பணியிடங்களில் அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு அலுவலக உதவியாளர்களில் பதிவு எழுத்தர் பதவிக்கான பணி விதிகளின்படி கல்வித்தகுதியுடையவர்களை பணி மூப்பின் அடிப்படையில் பணிமாற்று முறையில் பணி அமர்த்த வேண்டும். அப்படி பணி அமர்த்தப்படுமுன் அவர்கள் முதலில் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பணி அமர்த்தப்பட்டவர்களாகவும் தகுதிகான் பருவம் முடித்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஆ. தகுதியுடைய அலுவலக உதவியாளர்கள் இல்லாத நிலையில் பணியில் இருக்கும்போது காலமான ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுகளில் கருணை அடிப்படையில் பணி வாய்ப்பு கோரி ஊராட்சி ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பதவியில் பணி வாய்ப்பு கோரி மாவட்ட அளவில் காத்திருப்போர் பட்டியலில் தகுதியுடையவரை பதிவு மூப்பின் அடிப்படையில் பணி அமர்த்தவேண்டும்.

இ. அந்தந்த ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர்களில் தகுதி உடையோரும் கருணை அடிப்படையில் பணி வாய்ப்பு கோரி மாவட்ட அளவில் காத்திருப்போரும் இல்லாத நிலையில் மட்டுமே மாவட்ட வேலை வாய்ப்பகத்திலிருந்து பட்டியல் பெற்று அந்தந்த ஊராட்சி ஒன்றிய நியமனக்குழு தேர்வு செய்து தகுதி வாய்ந்த நபரை விதிகளுக்குட்பட்டு நேரிடையாக நியமனம் செய்யலாம்.

ஈ. அலுவலக உதவியாளர், பதவிகளில் ஏற்படும் நிரந்தர காலியிடங்களில் ஊராட்சி ஒன்றிய பணியில் இருக்கும்போது காலமான பணியாளர்கள் வாரிசுகளில் கருணை அடிப்படையில் ஊராட்சி ஒன்றிய பணியில் பணி வாய்ப்பு கோரி மாவட்ட அளவில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்களில் தகுதியுடையோரை பதிவு மூப்பு அடிப்படையில் பணி அமர்த்த வேண்டும்.

உ அடிப்படை பணி பதவிகளில் ஏற்படும் நிரந்தர காலி இடங்களில் பணி அமர்த்த கருணை அடிப்படையில் நியமனம் கோரியுள்ள மாவட்ட அளவிலான காத்திருப்போர் பட்டியலில் தகுதியுடையோர் இல்லாத நிலையில் மாவட்ட வேலை வாய்ப்பகத்திலிருந்து பட்டியல் பெற்று அந்தந்த உரிய தேர்வுக்குழு நியமனம் செய்து தகுதி வாய்ந்த நபரை விதிகளுக்குட்பட்டு நேரிடை நியமனம் செய்யலாம்.

ஊ. வேலை வாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று நேரிடை நியமனம் செய்யப்படும் நிகழ்வுகளில்

1. இட ஒதுக்கீட்டு அடிப்படையில் சுழற்சி முறையில் (Commumal Rotation) கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.
2. வேலை வாய்ப்பகத்திலிருந்து பெறப்படும் பட்டியலில் கண்டுள்ள பெயர்களில் மேலே (1)ல் உள்ள விதிமுறைப்படி பதிவு மூப்பின் அடிப்படையில்தான் நியமனம் செய்யப்படவேண்டும். ஒருவேளை பட்டியல்களில் உள்ள பெயர்களில் எவரேனும் தகுதியுள்ளவராக இருந்து நியமனக்குழு கூடும் நாளிலிருந்து 6 மாத காலத்திற்கு நியமனம் செய்வதற்கான அதிகபட்ச வயதை அடைவதாக இருந்தால் அவர்களின் பெயர்களுக்கு முன்னுரிமை அளித்து தேர்ந்தெடுக்கலாம்.

எ. காலிப் பணியிடங்களில் பணியமர்த்த பணியாளர்களை தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்முன் கீழ்க்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

1. நிரப்பப்படவுள்ள பணியிடங்கள் ஏற்கனவே அரசு அனுமதித்துள்ள பணியிடங்களாக இருத்தல் வேண்டும். தற்காலிகமாக அரசு அனுமதித்த பணியிடமாக இருந்தால் தொடர் அனுமதி நீட்டிப்பு ஆணை அரசிடமிருந்து பெற்றிருக்க வேண்டும்.
2. இந்த பணியிடங்கள் அரசினால் மறையும் பணியிடங்களாக (Vanishing Post) அல்லது மிகைப்பணியிடங்களாக (Supernumerary post) அறிவிக்கப்பட்டவைகளாக இருத்தல் கூடாது.
3. அரசினால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணி ஒய்வு பெறுநர் மற்றும் இறப்பு ஆகிய காரணங்களினால் எழும் காலியிடங்களை மட்டுமே நிரப்ப வேண்டும். தற்காலிக காலிப்பணியிடங்களை நிரப்பக் கூடாது.

ஏ. நியமன ஆணை வெளியிடுவதற்கு முன்னர் நிரப்பப்படவேண்டிய பணியிடங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் நியமனக் குழுவின் முடிவு தொடர்பான விபரங்களை ஊராட்சி ஒன்றிய ஆணையர், ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சியருக்கு தெரியப்படுத்தி இசைவு பெற வேண்டும். இசைவு அளிக்கும்முன்னர் பணி விதிகள், நெறிமுறைகள், நிபந்தனைகள், அரசாணைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளனவா என்பதை மாவட்ட ஆட்சியர் உறுதி செய்ய வேண்டும். இசைவு அளிக்கப்படுகின்றதா அல்லது மறுக்கப்படுகின்றதா என்பதை மாவட்ட ஆட்சியர் 15 நாட்களுக்குள் தெரியப்படுத்த வேண்டும். இசைவு பெற்றதும் 3 நாட்களுக்குள் நியமன அலுவலர் ஆணைகள் வெளியிட வேண்டும்.

ஐ. நியமனக்குழுவின் ஆய்வுக்கு வைக்கப்படும் பொருள் தொடர்பான குறிப்பில் விதிகள், நெறிமுறைகள், நிபந்தனைகள், அரசாணைகள் போன்ற விபரங்களை குறிப்பிட்டு நியமனக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டியது ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்) ஆகியோரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

3. ஊராட்சி ஒன்றிய அளவில் அலுவலக உதவியாளர் பணியிடை எண்ணிக்கை 4 என்று அரசாணை நிலை எண் 180 ஊரக வளர்ச்சி நாள், 09.06.97ல் நிர்ணயிக்கப்பட்டது. அரசாணை நிலை எண் 745 நிதித்துறை நாள் 22.09.95ல் அளவுகோல் படியானது அல்லது என்றாலும் ஊராட்சி ஒன்றிய அளவிலான அமைப்பு முறையை கருத்தில் கொண்டு கடைபிடிக்க அனுமதிக்கப்படுகின்றது.

4. இந்த அரசாணையை அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் உடனடியாக அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளபடுகிறார்கள்.

5. இந்த அரசாணை நிதித்துறையின் அரசாணை எண் 270/எஸ்எஸ் (ஜிவி/2000) நாள் 05.05.2000ல் இசைவு பெற்று வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்